செ.வெ.எண்: 725 நாள்: 25.10.2019

**முத்துராமலிங்கத் தேவரின் குருபூஜையினை முன்னிட்டு மதுபானக்கடைகள் மற்றும் மதுக்கூடங்கள் இரு தினங்கள் மூட உத்தரவு.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

முத்துராமலிங்கத் தேவரின் குருபூஜையினை முன்னிட்டு மதுபானக்கடைகள் மற்றும் மதுக்கூடங்கள் இரு தினங்கள் மூட உத்தரவு. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்தில், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் 112-வது பிறந்த நாள் விழா மற்றும் 57 வது குருபூஜை நடைபெறவுள்ளதை முன்னிட்டு, புதுக்கோட்டை மாவட்டம் வழியாக பசும்பொன் கிராமத்திற்கு செல்லும் ஆறு வழித்தடங்களில் அமைந்துள்ள 33 மதுபானக்கடைகள் மற்றும் அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள மதுக்கூடங்களை 29.10.2019 மற்றும் 30.10.2019 ஆகிய இரண்டு தினங்கள் மூடப்பட்டிருக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**